விலை ரூபா 5.00 | Registered as a News Paper in Sri Lanka | பக்கம் எட்டு

# வலம்புரி

VALAMPURI

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகைமாடம்
177/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP:- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 12 புதன்கிழமை (28-8-2002) தொலைபேசி 3378 ஒலி 252

## தீர்வுத்திட்ட விடயங்கள் அடங்கிய பேச்சு நவம்பரில் இடம்பெறும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கின்றன. இரு தரப்புக்கும் இடையில் பூர்வாங்க பேச்சுவார்த்தை நவம்பர் மாதத்தில் ஆரம்பமாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்தார். கொழும்பு மறைமாவட்ட பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ்ஸை நேற்றுக் காலை பேராயர் இல்லத்தில் சந்தித்துப் பேசும்போதே பிரதமர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார். நேற்று முற்பகல் 11.10 மணியளவில் பேராயரை சந்தித்த பிரதமர் சுமார் 40 நிமிடங்கள் அவருடன் கலந்துரையாடினார். இச் சந்திப்பில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் (8-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபர் லக்கி நேற்று திடீர் மரணம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு, நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில், தமது இல்லத்தில் திடீரென மரணமடைந்துள்ளார்.

1941ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை பண்டாரவளை சென் தோமஸ் கல்லூரியிலும், உயர் கல்வியை மாத்தளை சென் ஜோசப் கல்லூரியிலும் பெற்றார்.

பொலிஸ் திணைக்களத்தில் 1966ம் ஆண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக சேர்ந்த இவர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக 1985ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்றதோடு சேவையில் இருந்து விலகினார்.

மீண்டும் பொலிஸ்சேவையில் 1994ஆம் ஆண்டு இணைந்த கொடித்துவக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு பெற்றார்.

1998-ம்ஆண்டுபொலிஸ்மா அதிபராக பதவி உயர்வை அடைந்த இவர் பதவியில் இருக்கும்போதே உயிரிழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ★ ஆதரிப்பதா? எதிர்ப்பதா?

# அரசின் நம்பிக்கை பிரேரணையால்

# தமிழ்க் கூட்டமைப்புக்குள் இழுபறி

## கூட்டணி ஆதரவு - காங்கிரஸ் நடுநிலை

(நமது நிருபர்)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி அரசினால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கைப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பதில் தமிழர்தேசியக் கூட்டமைப்புக்கிடையே இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது**

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவி ஏற்றுஎட்டுமாதங்கள் கடந்த நிலையில் எதிர்க் கட்சியினர் அமைச்சர்கள் பலரின்செயற்பாடுகள்குறித்து நம்பிக்கை இல்லாத்தீர்மானங்களைக் கொண்டு வருவதை அடுத்து அரசு தன் மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை கொண்டுவரவுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

வரி அறவிடுவதை உறுதி செய்தால்

## புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன்

### நிதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கு பகுதிகளில் வரிஅறவிடுவது தொடர்பாக ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு நிதியமைச்சர் கே.என். சொக்ஸி பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுனில் கன்னியாராட்சி விடு

(8-ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல்

## செப். 25ல் நடத்த ஏற்பாடு

## இறப்பர் கூட்டுத்தாபன நிதிமோசடி

## - முன்னாள் பிரதமர் மீது

## செப். 25ல் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவடக்குக் கிழக்கிலுள்ள உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்குப் பணித்துள்ளார்.

இது தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு தேர்தல் ஆணையாளர் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தேர்தலை நடத்தும் பொருட்டு அதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் படிவங்களை தேர்தல் திணைக்களத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும்,

அதேவேளை வடக்குக் கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலுக்கு என ஏற்கனவே வழங்

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - முன்னாள் பிரதமர் மீது விசாரணை நடத்த வேண்டும்

(கொழும்பு)

இலங்கை இறப்பர் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும், முன்னாள் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்காவும் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இறப்பர் கூட்டுத்தாபனத்திற்கு ஜனாதிபதியின் சிபார்சின் பேரில் ஒதுக்கப்பட்ட 971 மில்லியன் ரூபா பணத்தில் 547 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது என்பதுபற்றி மேற்கொள்ளப்பட்டிருந்த இரகசியப் பொலிசாரின் விசாரணைகள்ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் விசாரணை அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இந்த நிதிமோசடி தொடர்பாக றப்பர் கூட்டுத்தாபனத் தவிசாளர், கணக்காளர் உட்பட நான்குபேர் கைதுசெய்யப்பட்டு விசார

(8-ம் பக்கம் பார்க்க)


### இதோ உங்கள் உற்றதுணையான சுபாசிறி கடன்பற்றிய விபரங்கள்

ஹற்றன் நஷனல்

# சுபாசிறி

சொந்தத் தேவைகளுக்கான கடன் திட்டம்

- ★ ரூ.25,000/- முதல் ரூ.400,000/- வரை கடன் வசதி பெறலாம்
- ★ மூன்று வருடங்கள் வரை மீளச் செலுத்தும் வசதி
- ★ கவர்ச்சிகரமான வட்டி வீதம்
- ★ எழுத்து வேலைகள், பத்திரப்படுத்தல்கள் குறைவு

மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

**உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட, உங்கள் தேவைகளுக்கெல்லாம் கைகொடுக்கும் தனிப்பட்ட கடன் திட்டம்**

**ஹற்றன் நஷனல் வங்கி**

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை

இல.212, 214, ஆஸ்பத்திரி வீதி

தொலை பேசி: 021 - 2787, 021 - 3463

தொலை நகல்: 021 - 3194.

## சீமெந்து எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு தனியார் சீமெந்து விற்பனை நிலையங்களுக்கான சீமெந்து நேற்றையதினம் இந்துருவலி கப்பல்மூலம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்பட்டது. (உ-2)

## நிரந்தர உள்நுழைவுப் பத்திரம்

(திருநெல்வேலி)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வன்னிப்பெரு நிலப்பரப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மற்றும் பளை,வடமராட்சி கிழக்கு பகுதி பொது மக்களுக்கு 6 மாத நிரந்தர உள் நுழைவு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக புலிகளின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை,யாழ் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் காலதாமதத்தைத் தவிர்க்கும் நோக்கில் உள்நுழைவுப் பத்திரத்தினை தனியார் கடைகளில் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-43)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களை கட்டியெழுப்ப

# ஆசிய அபி. வங்கி 40 மில்லியன் டொலர் ஒதுக்கு

## திட்டமிடல் நிபுணர் எம். திருச்செல்வம் தெரிவிப்பு

(தென்மராட்சி)

ஆசிய அபிவிருத்தி வங்கி வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கல்வி, சுகாதாரம் மீன்பிடி, வீதிகள் வீடமைப்புகுடிநீர்போன்ற திட்டங்களை அமுல்செய்வதற்கு 40 மில்லியன் டொலரை ஒதுக்கீடுசெய்துள்ளது என யாழ்ப்பாணத்துக்கு நேற்றையதினம்வருகை தந்திருந்த ஆசிய அபி விருத்தி வங்கியின் திட்டமிடல் நிபுணர் எம் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றிஅவர்மேலும்தெரிவிக்கையில்; இத்தொகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் கல்வி சுகாதாரம், மீன்பிடி திட்டங்களுக்கென இதுவரை 84மில்லியன் ரூபாவுக்கான திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும்.

இவற்றில் சாவகச்சேரிடிறிபேக்கல்லூரிக்கான மூன்று மாடிக்கட்டடம் அமைப்பதற்கு 7 8மில்லியனும்தென்மராட்சி வலயத்திலுள்ள 40 பாடசாலைகளுக்குதளபாடம் வழங்குவதற்கு 5 1 மில்லியனும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் பிரசவ விடுதி அமைப்பதக்கு 8 மில்லியனும் ஜெனரேட்டர் கொள்வனவுக்கு 1.6 மில்லியனும் அம்புலன்ஸ் வண்டிககு 3 மில்லியனும் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வடமராட்சி கிழக்கிலுள்ளஉடுத்துறைமகா வித்தியாலயத்துக்கான கட்டடத்துக்கு 9.6 மில்லியனும் ஆழியவளை சீ சீ த.க பாடசாலைக்கு 6.1 மில்லியனும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கு6.4 மில்லியனும் தாளையடி றோ.க.த.க. பாடசாலைக்கு 2.8 மில்லியனும்வடமராட்சி கிழக்கிலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு தளபாடம் வழங்குவதற்கு 3.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது

மேலும், மருதங்கேணி மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் அனைத்துக் கட்டடங்களையும் நிர்மாணிப்பதற்கு 23.6 மில்லியனும், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் மீனவர்களுக்கான தங்குமிடம் அமைப்பதற்கு 1.2 மில்லியனும், கைதடி முதியோர் இல்லத்துக்கு சொகுசுவான் கொள்வனவுக்கு 2.9 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என திட்டமிடல் நிபுணர் குறிப்பிட்டார்

அத்தியாவசிய புனர்வாழ்வுத் திட்டங்களின் அடிப்படையில் வடக்கு- கிழக்கிலுள்ள விடுவிக்கப்பட்ட, மற்றும் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டங்கள் இனங்காணப்பட்டு 2006. ஆம் ஆண்டுக்குள் அமுல் செய்யப்படும் என்றும் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை, யாழ்ப்பாணம் மேலதிக கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, கல்வி உயர் கல்வி அமைச்சு மாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் நேற்றையதினம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஏம்.பி பாடசாலைகளின் அதிபர்களை வெவ்வேறாகச் சந்தித்து கல்வித்திட்டங்கள் பற்றி ஆராய்ந்தனர்.

இச் சந்திப்பின் போது உலக வங்கியின் ஆலோசகர் பீட்டர் கொலன்கோ, கல்வி உயர் கல்வி அமைச்சை சேர்ந்த முத்து சிவஞானம், கல்வி அமைச்சின் பணிப்பாளர் நகயகம் ஆர். எஸ். மெடகம, உட்பட வேறும் பலர் பங்கு கொண்டிருந்தனர். (உ-77, 43)

உள்ளூராட்சித் கப்படட வாக்காளர் அட்டையே தற்போதைய தேர்தலுக்கு பயன்படுத்தப்படவுள்ளதுடன் புதிதாக வாக்காளர் அட்டை வழங்கப்படமாட்டாது எனவும் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (த)

## குரல்வளைஅறுக்கப்பட்டு இடையர்கள் கொலை

(புதுடில்லி)

இந்தியாவின் ராஜுரி மாவட்டத்தில் 10 இடையர்கள் குரல்வளை அறுக்கப்பட்டுகொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் சடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

முஸ்லிம் தீவிர வாதிகளே இப்படுகொலைகளைப் புரிந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. (உ-3)

## ‘கனவுகள்’ காண தென் இலங்கை மக்கள் ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கலைபண்பாட்டுக் கழக அனுசரணையுடன் புதுவை அன்பனின் ‘கனவுகள்’ தெருக்கூத்து நல்லூர் ஆலயச் சூழலில் தற்போது ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது.

இதனைத் தென்னிலங்கை மக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை, இவ் ஆற்றுகை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (உ-19)

## வட - கிழக்கு பாடசாலைகள் விருத்திக்கு 2000 மில்லியன்

(திருநெல்வேலி)

வடக்கு-கிழக்கில் உள்ள பாடசாலைகளில்மேலதிகமாக தகவல் தொழில் நுட்பம்,ஆங்கிலக் கல்வி என்பவற்றை சேர்த்துக் கொள்ளவும் புனர்நிர்மாணம் செய்யவும் உலக வங்கியினால் 2000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நிதியிலிருந்து முதலாவது கட்டமாக தெல்லிப்பழை யூனியன்கல்லூரி,வசாவிளான் மகா வித்தியாலயம் ஆகியன புனரமைக்கப்படவுள்ளன. (உ-43)

### பல்லைப்பை இராணுவ முகாம் ஊடான

## வீதியைத் திறந்து மக்கள் பாவனைக்கு விடகோரிக்கை

(மந்திகை)

வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் உற்சவ காலத்தில் புலோலி பல்லைப்பை இராணுவ முகாம் வீதி ஊடாக அடியார்கள் ஆலயத்திற்கு செல்வதற்கு வசதியாக வீதித் தடையை நீக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி வடக்குபிரதேச செயலர்ஆ. சிவசுவாமி தலைமையில் உற்சவகால முன்னேற்பாடு தொடர்பாக செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டை இராணுவத்தினர் கைப்பற்றிய வேளை அமைக்கப்பட்ட இவ் இராணுவ முகாம் பகுதியூடாக பொது மக்கள் போககுவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து இம் முறை வெளிநாடுகள் மற்றும் யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் இருந்து பெருமளவிலான அடியார்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது

இதனால் போக்கு வரத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளை தவிர்க்கும் பொருட்டு இப்பாதையூடான போக்குவரத்துக்கு போடப்பட்டுள்ள வீதித் தடையை நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, இப்பாதை கடந்த காலங்களில் நடைபெற்ற உற்சவத்தின் போது திறந்து விடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் படையினர் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது; (உ-23)

## இராசி பலன்

28- 8- 2002

(ஆவணி 12, புதன்)

பஞ்சமி பி. ப. 1. 10வரை

அச்சுவினி மாலை 6.42வரை

ராகுகாலம் 12. 05- 1. 35

நல்ல நேரம் 4. 35- 6. 05

**மேடம்**

ஜனவசியம், முயற்சி கைகூடும், தெய்வசிந்தை, உடல் நலக்குறைவு

**இடபம்**

காரிய அலைச்சல், பொருள் விரயம், மனக்கிலேசம், பெரியோர் மனஸ்தாபம்

**மிதுனம்**

பொருள் சேர்க்கை,தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், கீர்த்தி

**கடகம்**

தொழில் மேன்மை, தூர தேச செய்தி, அதிகாரம், முயற்சி கைகூடும்

**சிங்கம்**

உடல் வியாதி, பிரயாணம், காரிய தாமதம், நித்திரைக் குழப்பம்

**கன்னி**

காரியதடங்கல்,சிறுவியாதி, நண்பர்கள் விரோதம், பிரயாண பயம்

**துலாம்**

போசனசுகம், களஸ்திர சுகம், உடல்நலம், முயற்சி கைகூடும்

**விருச்சிகம்**

மனமகிழ்ச்சி, தொழில் விரத்தி, சத்துரு ஜெயம், காரிய சித்தி

**தனுசு**

சிறுவியாதி, குடும்பக் கவலை, அபகீர்த்தி, முயற்சி தாமதம்

**மகரம்**

தொழில் கஷ்டம், மனச் சஞ்சலம், காரிய தாமதம், திடீர் நன்மை

**கும்பம்**

சகோதரர் உதவி, குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை,தன வரவு

**மீனம்**

தேவையற்ற விவாதம், தனவிரயம், முயற்சிதாமதம், தொழில் கஷ்டம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மனநோயாளர்களை வீதிக்கு விடவேண்டாம்

### உறவினர்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் அலையும் மனநோயாளர்களே விபத்துக்கள் ஏற்பட ஏதுவாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வீதிகளில் அலையும் மன நோயாளர்களைக் கண்டால் தாம் தெல்லிப்பழை மனநோயாளர் வைத்தியசாலையில் சேர்த்து வருவதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, இவ்வாறானவர்களை வீட்டைவிட்டு வெளியேற விடவேண்டாம் என உறவினர்களைக் கோரியுள்ளனர். (உ-19)

## அபி. வேலைகள் பற்றிய அறிக்கையை 6 ஆம் திகதிக்குமுன் சமர்ப்பிக்குக

(திருநெல்வேலி)

குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பான அறிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னராக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மாகாணக் கல்விப் அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

குடாநாட்டு பாடசாலைகளின் அபிவிருத்தி புனரமைப்பு தொடர்பாக வெளிநாட்டு நிறுவனங்களுடன் கலந்துரையாட வேண்டி இருப்பதால் மாகாண கல்வி அமைச்சு செப்ரெம்பர்13ஆம் திகதிக்கு முன் மத்திய கல்வியமைச்சிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ எம். இஸ்ஸதீன் அறிவித்துள்ளார். (உ-43)

### மது போதையில்

## தகராறு விளைவித்தால் தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மத்திய பகுதியில் மதுபோதையில் தகராறு விளைவிப்பவர்களிடம் தண்டப்பணம் அறவிடுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மது போதையில் வந்துகுழு மோதல்களில் ஈடுபடுவதால் பொதுமக்கள்பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுகுறித்துபொலிஸார்க்கு எடுத்துக் கூறியதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (உ-19)

## தாபன விதிக் கோவை தமிழ் மொழியில் இல்லை

(சுதுமலை)

தாபன விதிக் கோவை தமிழ் மொழியில் இல்லாமையால் அரசாங்க உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களிற்கு உள்ளாக வேண்டிய நிலைஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்க அச்சகத்தால் அச்சிடப்படும் இக் கோவையின் இறுதிப் பதிப்புகள் சிங்கள மொழியிலும்,ஆங்கில மொழியிலும் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள், பதவி உயர்வு பரீட்சைகள், வினைத்திறமைகாண்தடைப்பரீட்சைகளிற்கு இத்தாபன விதிக் கோவையில் உள்ள வினாக்களிற்கு கணிசமானபுள்ளிகள் பெற்றால் மட்டுமே சித்தியடைய முடியும்என்பதுகுறிப்பிடத்தக்கது. (உ-252)

## நல்லூரான் திருவடிக்கு-16



### அண்மினோம் அருள் செய்வாயே!

துய்யவே லதனைத் தொட்டே
துட்டரை நொடியில் மாய்த்த
கையனே! கங்கை மைந்தா!
கார்த்திகை மாதர் சேர்த்த
மெய்யனே! வள்ளி தெய்வி
மேவிய மெய்ம்மை ஞான
ஐயனே! நல்லைக் கந்தா
அண்மினோம் அருள் செய்வாயே!

சமூக இரத்தினம்
எம். கே இளையப்பு ஜே பி

### கடைக்கண் பாரப்பா!

கருணைக் கடலே நல்லூர் கந்தா!
கரிமுகனுக்கு இளையவா காரிருள் நீக்கிவா
சருமுதல் வெடி ஓசைகளைகேட்டோம்-இனி
களம் அதுவேண்டாம் சாப்பியமும் வேண்டாம்
கழல் அதுகாயாது கால் வயிறு உண்டி போதும்
கல்வி அதில் எக்காலமும் யாழ் அது முன்நிற்க
கடைக்கண் திறந்து அருள்வாயப்பா!

'வைஇரவி'

### வணங்க எழில்காட்டி அருள்வாய்

சிலையென நல்லையம் பதியுறை மெய்ச்சுடர்
என்றொளி கூட்டி மகிழும்
சீருடை மாமயில் வீரனே என்னையாள்
திருவான மெய்த் தெய்வமே
கலைமிளிர் கருப்பொருள் வண்ணமே காட்டியெம்
கருத்தினுள் நிறைந்து மிகவே
கவின்தரு ஜோதியே கந்தனே என்றுனை
கண்ணீரும் சிந்திய ழைக்கும்
நிலையினைத் தந்தவா நிர்மல ரூபனே
நித்தியா னந்தப் பொருளே
நித்திய மாயொளிர் சித்தமே கண்டுனை
நித்தமும் வணங்கி மகிழ
மலையென வருதுயர் நிலைகெட வைத்தொளிர்
மகிமையும் காட்டி உந்தன்
மலரடி தொழுதெழில் கண்டெழும் பாக்கியம்
நல்கிடும் ஞான முதலே!

'இளங்கவி பாரதிபாலன்'
சு. குகதேவன்

### அடிமை விலங்கொடியும்

ஆறுமுகன் தாள் பணிய
அடிமை விலங் கொடியும்!
கூறு மடியவர் தம்
கொள்கை சிறந் தொளிரும்!
பேறுபல கிடைக்கும்!
பேரின்ப வாழ் வினிக்கும்!
வேறுபா டற்று வாழ
வேலன் டணி சிறக்கும்!

-தென்நல்லை கு. பகிரதன்-

### வீதி வலம்வரும் வேல்

பாறை பிளந்து பயிர்வளர்க்கும் வல்லமையும்
ஊரைச் சிறக்கவைக்கும் உயர்கல்வி காத்திடவும்
ஓயாதுழைப்பவர்தம் உறுதிக்குத்துணை யெனவும்
தாயாய் எமைத்தேடித் தங்கவேல் வந்ததம்மா

தாரை தப்பட்டம் தவிலோடு நாதஒலி
வேத மறையுந்தன் வீதியிலே தானொலிக்க
கைத்தாளம் தப்பாமல்சுந்தர்பஜனை வர
முத்தான முருகன் வேல்வீதி வலம்வந்ததம்மா

செ. பவானி

### நற்கதிதான் உந்தனுக்கு

வேண்டும் வர மளித்து வெவ்வினையின் வேரறுத்து
நல்லூரில் குடியமர்ந்து நாற்றிசையும் அருள் சுரக்கும்
நல்லைக் குரு நாதன் நமைக் காப்பான்
நம்பியிரு மனமே நற்கதி தான் உந்தனுக்கு

கே. வி. குணசேகரம்

## குற்றச் செயல்கள் பெருகியதை அடுத்து, கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு மீண்டும் செயற்பட ஆரம்பித்தது

(கொழும்பு)

கொழும்பு குற்றப் புலனாய்வுபிரிவு மீண்டும் இயங்க ஆரம்பித்துளளது

உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முன் தினம் இதனைத் திறந்து வைத்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தின் போது, இப்பணியகம் மூடப்பட்டது.

கொழும்பிலும்அதன்சுற்றுப்புறச் சூழல்களிலும் தற்போது குற்றச்செயல்கள் அதிகரித்துவருவதைதொடர்ந்தே இப் பிரிவு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இப்பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தலைமையில் இப்பணியகம் இயங்க ஆரம்பித்துள்ளதுடன் மூன்று பிரிவுகளாகவும் செயற்படவுள்ளது.

இவ் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் ஜோன் அமரதுங்கா,

இத்தகைய தொரு பிரிவுகளை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்க வேண்டும். முன்னைய ஆட்சிக் காலத்தின் போது குற்றப் புலனாய்வு பிரிவு சிறப்பான வகையில் பணியாற்றி வந்தது என்று குறிப்பிட்டதுடன், ஆனால் அதனை அவ்வரசு மூடிவிட்டது குறித்தும் கவலை தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் எடுக்கப்படும் முதலாவதுநடவடிக்கை இதுவாகும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

(உ-8)

### தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச இந்துப் பேரவை 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்திவரும் நல்லூர் உற்சவ கால தெய்வீக நிகழ்ச்சியில் இன்று 'சிதம்பரதரிசனம் என்னும் பொருளில் சைவப்பெரியார் எஸ்.சண்முகவடிவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்

### தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் பதினாறாம் நாளான இன்று வி. கே. பஞ்சமூர்த்தியின் செஞ்சிற் கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் நடைபெறவுள்ளது.

### சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி அகில இலங்கை கம்பன் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் தெய்வீகச் சொற்பொழிவில் இன்று 'அருணகிரியார் கண்ட முருகன்' என்ற பொருளில் கு.பாலஷண்முகனின் தெய்வீகச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

### இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் மகாபாரதத் தொடர் இசைப்பேருரை, இன்று 'அரக்கு மாளிகை' என்னும் பொருளில் இடம்பெறவுள்ளது. (உ-3)

### கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் 6 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று இரவு 8 30 மணிக்கு உடுப்பிட்டி குணசேகரா வி.க, எதிர் தொண்டமனாறு கலைவாணி வி.க ஆகியன மோதவுள்ளன.

● ● ●

கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத்தில் (செற்றப்கேம்) இன்று இரவு 8 00 மணிக்கு யாழ். பல்கலைக் கழகவி. க, எதிர் அரியாலை ஐக்கிய வி. க; ஆகியன மோதவுள்ளன.

(உ-3)

## வேலை வாய்ப்பு பற்றிய எண்ணப் பகுப்பாய்வு

(ஈச்சமோட்டை)

அரச, தனியார் மற்றும் ஏனைய தொழில்வாய்ப்புகள் சம்பந்தமான இளைஞர்களினது எண்ணப் போக்கினைப் பற்றிய பகுப்பாய் வொன்றை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் மேற்கொண்டு வருகின்றது.

நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் இப் பகுப்பாய்வு நிகழ்வுகளில் இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், இளைஞர் குழுத் தலைவர்கள் பகுப்பாய்வு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களை மேற்பார்வை செய்வதில் உதவி இயக்குநர்கள் பணியாற்றுகின்றனர்.

இம் மாதஇறுதிக்குள் நிறைவுறும் இப் பகுப்பாய்வு வேலைத்திட்டத்தை யாழில், மாவட்ட உதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி மேற்பார்வை செய்து வருகிறார்.

இப் பகுப்பாய்வு வேலைத் திட்டத்தில் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டவர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த மாதம் பட்டங்கல பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

## இந்து மாணவர்களுக்கு இலவச தொழில்சார் கல்வி

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் அல்லது உயர் தர வகுப்புகளில் கல்விகற்று, இப்போது தொழில்சார் கல்வியைக் கற்கும் அல்லது கற்கத் திட்டமிட்டிருக்கும் இந்து மாணவர்களுக்கு உதவிசெய்ய அகில இலங்கை இந்து மாமன்றம் முன்வந்துள்ளது.

இந்த உதவியைப் பெறுவதற்குத் தகுதியானவர்களை, அகில இலங்கை இந்து மாமன்றம், 91,5 சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-2 என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு, விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## புத்தளம்-மன்னார் வீதி திறக்க பிரதமர் இணக்கம்

(கொழும்பு)

யுத்தம் காரணமாக மூடப்பட்டுள்ள புத்தளம்-மன்னார் வீதி விரைவில் பொதுப் போக்குவரத்துக்காக திறந்து விடப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் எம்.பியும் பாராளுமன்றவிவகார அமைச்சருமான ஏ.எச்.எம். அஸ்வர் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் விடுத்திருந்த வேண்டுகோளுக்கமைய வே இவ்வீதி திறக்கப்படவிருக்கிறது.

இதற்கான அனுமதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியிருப்பதாக அமைச்சர் அஸ்வர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குயுத்தம் காரணமாக கடந்த 20 வருடங்களாக பாதுகாப்புகாரணத்தை முன்னிட்டு இவ் வீதி மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## பேச்சுக்களில் ஹக்கீம் கலப்பதால் பயனில்லை
### தே.ஐ.மு. தலைவி பேரியல்

(கொழும்பு)

அரசு புலிகள் இயக்கத்திற்கிடையிலான நேரடி பேச்சுவார்த்தைக்கு புலிகள் மீதான தடை ஓர் தடையாக இருந்தால் அதனை அகற்றுவதில் எமக்குஆட்சேபனை இல்லை.

அரசும் புலிகள் இயக்கமும் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டதுமேபுலிகள் மீதான தடை அகற்றப்பட்டு விட்டது.இப்பொழுது பெயரளவிலேயே அகற்றப்படுகிறது என தேசிய ஐக்கியமுன்னணி தலைவி திருமதி பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; கடந்த அரசாங்கம்முஸ்லிம்களுக்கென தனியானஅதிகார அலகு திட்டமொன்றை அரசியல் யோசனையில்உள்ளடக்கி இருந்தது. அது போன்ற யோசனையை இந்த அரசும் உள்ளடக்கி உள்ளதா? என்பதை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உறுதிப்படுத்த வேண்டும்.

மு. கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அரசின் பிரதிநிதியாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில் பயன் இல்லை அரசின்பிரதிநிதியாக கிழக்குமாகாணமுஸ்லிம்களை பிரதி நிதித்துவம் செய்யமுடியாது என்றுகுறிப்பிட்டார். (உ)

# தோல்வி இன்றி வாழ்க்கை இல்லை

# முயன்றால் முடியாததும் இல்லை

## உனக்குள் இருக்கும் ஆற்றலை வெளிப்படுத்து

தோல்வி இல்லாமல் மனித வாழ்க்கை இல்லை நினைத்ததை அடைய முடியாமல் ஏமாற்றம் உண்டாவது வழமை. அவ்வாறாயின் தோல்வியைத் தவிர்ப்பது எவ்வாறு? வெற்றிகண்டவர்கள் தோல்வியைச் சந்தித்தது இல்லையா? பல தோல்விகளுக்குப் பின்னர் தான் அவர்களுக்கு வெற்றிக்கனி கிடைத்தது.

நாம் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோமோ அப்படி எம்மை அமைத்துக் கொள்ளும் ஆற்றல் நம்மிடம் இருக்கிறது. அந்த ஆற்றலை வெளிக்கொண்டு வரும்போது வாழ்வியலில் வெற்றியின் விதை ஊன்றப்படுகிறது,

வாழ்க்கையில் வெற்றி காண வேண்டும். இந்த விருப்பம் இல்லாத எவரும் இருக்க முடியாது. ஆனால் எல்லோரும் தாம் நினைத்ததை அடைந்து வெற்றி பெறுவதில்லை. மிகக் குறைந்தவர்களே தமது வாழ்க்கையில் உண்மையான வெற்றி காண்கின்றார்கள்.

தோல்வி இல்லாமல் மனித வாழ்க்கை இல்லை. நினைத்ததை அடைய முடியாமல் ஏமாற்றம் உண்டாவது வழமை அவ்வாறாயின் தோல்வியைத் தவிர்ப்பது எவ்வாறு? வெற்றி கண்டவர்கள் தோல்வியைச் சந்தித்தது இல்லையா? பல தோல்விகளுக்குப் பின்னர்தான் அவர்களுக்கு வெற்றிக் கனி கிடைத்தது

### வெற்றியின் ஏணிப்படி எது?

தோல்விகளே வெற்றியின் ஏணிப்படிகள் என்பர். தோல்வியைக் கண்டு துவளாது, முயற்சி செய்தே அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள் அது மட்டுமன்று, வெற்றிப் படிகளில் ஏறியவர்கள் தமக்கு உண்டான தோல்விகளைப் பெரிதாக வெளியில் சொல்வதில்லை தமக்கு ஏற்பட்ட தோல்விகள் குறித்து அலசி ஆராய்கிறார்கள். தோல்வியைத் தந்த சம்பவங்களைப் பகுத்து பார்க்கிறார்கள் அவற்றில் இருக்கும் வெற்றியின் அம்சங்களைப் பிரித்து நோக்குகிறார்கள்.

இந்த அம்சங்களை தமக்கான அனுபவமாக, ஏன் படிப்பினையாகக் கொள்கிறார்கள். தோல்விகளைச் சவால்களாகக் கருதி மேலும் உழைக்கிறார்கள், கடும் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். இறுதியில் அவர்களுக்கு அவர்களது நெஞ்சங்களுக்கு வெற்றி கிடைத்து விடுகிறது.

வெற்றிப்படிகளுக்கு உயர்ந்தவர்கள், என்னால் இவ்வளவு தான் முடியும், இதற்கு மேல் இயலாது என்று நினைப்பதில்லை, சொல்வதும் இல்லை. எனது அதிர்ஷ்டம் இவ்வளவுதான், இதற்குமேல் நான் என்ன செய்யலாம் என்று நாலுபேருக்கு முன் சலித்துக்கொள்வதும் இல்லை.

### விவேகானந்தரின் புத்திமதி

ஒருவன் அவ்வாறு கூறினால், செயலிழந்தால் அவன் தனது ஆற்றலைத் தானே குறைத்து மதிப்பிடுகிறான் என்பதாகும். உனக்குள் இருக்கும் ஆற்றல் சூழ்நிலையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று சிந்தித்துச் செயற்படின் வெற்றி நிச்சயமாகும்.

### எதிலும் வெற்றி எங்கும் வெற்றி

அவரவர்தமக்குள்ளே இதற்கான விழிப்புணர்வை உண்டாக்கினால் எதிலும்வெற்றி; எங்கும் வெற்றியே! உண்டாகும். நாம் வாழ்வியலுக்கான போராட்டத்தில் நிற்கின்றோம். எமது வாழ்க்கையில் நாம் பல தோல்விகளையும், சோதனைகளையும் எம் நெஞ்சத்தின் கதவுகளில் பூட்டி வைத்திருக்கிறோம் இனியும் பூட்டப்பட்ட நெஞ்சக கதவுகளின் பூட்டுக்கள் உடைக்கப்பட வேண்டும். வாழ்க்கையின் வெற்றியின் அனுபவங்களை நாம் தினமும் அனுபவிக்க வேண்டுமாயின் எமக்குள்ள ஆற்றல்களை, ஆற்றல் எதுவாயிருந்தாலும் வெளிக்கொண்டு வர எத்தனியுங்கள்.

இந்த எத்தனிப்புகள் தான் பல வெற்றியின் பக்கங்களைப் புரட்ட வல்லவையாக அமைகின்றன. இனியும் காத்திருப்புக்கள் வேண்டாம். வீறுநடை போட ஆரம்பியுங்கள் வெற்றி நமதே!!:

**குருநகர் கவிசுகி**

புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளரவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் புத்திமதி கூறியிருப்பதை மனதிற் கொள்வது நல்லது.

தமக்குரிய கடமைகளை ஒழுங்காகவும், தவறாமலும் செய்பவர்களும், தம்மால் இயன்றவரை முயற்சி செய்து உழைப்பவர்களும் வெற்றி கண்டே ஆவார்கள். வாழ்க்கையில் பெருவெற்றி கண்டவர்கள், சாதனை படைத்தவர்கள் என்னென்ன குணாம்சங்களைத் தமதாக்கி அவ்வாறு உயர்ந்தவர்கள் என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொள்வதற்கான ஆர்வமும், ஆசையும் அவசியம். அந்தக் குணங்களை நமக்கு ஏற்ற முறையில்

## செப்ரிசீமியாவால் முதியவர் மரணம்

(மந்திகை)

செப்ரிசீமியா நோயினால் பீடிக்கப்பட்ட முதியவர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் ஞாயிறன்று மரணமானார்.

வதிரி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்தில் முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த நடராஜா ஜீவராஜா (வயது 65 )என்பவரே மரணமானார்.

கடந்த 24 ஆம் திகதி இவர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இறந்தவரின் சடலம் நேற்று முன்தினம் அரசசெலவில் அடக்கம்செய்யப்பட்டுள்ளது.

(உ-23)

### ஆன்மீக

விதவிதமாகச் சாப்பிட்டுப் பார்க்க வேண்டும்என்ற ஆசையில் வந்தார்கள். அதனால் தான் கஷ்டம்' என்றார். உண்மைதான். நமது நோக்கங்கள்முறையாக இருந்தாற் றான் ஆன்மீக அனுபவங்களும் முறையாக இருக்கும். இல்லையென்றால் இவர்கள் பட்டினி கிடந்தது போல அனுபவங்களும் வேறு விதமாகத்தான் இருக்கும்.

இப்போதும் பலர் காசியாத்திரை என்று போகிறார்கள். அவர்களுக்கும் ஒவ்வொரு நோக்கம் இருப்பது உண்டு. அங்குபோய்தங்களுக்குப்பிரியமான எதையாவது விட்டு விட்டு வருவதும் உண்டு. ஆபிசில் வேலை பார்க்கிற ஒரு அம்மா சமீபத்தில் காசிக்கு குடும்பத்தோடு போய் விட்டு வந்தார் 'என்னம்மா உங்களுக்குப் பிரியமான எதையாவது காசியில் விட்டு விட்டு வந்தீர்களா என்று கேட்டேன். மிகவும் பக்தி சிரத்தையோடு 'ஆமாம்' என்றார். 'எதை' யென்று கேட்டேன் 'எங்கள் மாமியாரை' என்றார்.

தென்கச்சிகோ சுவாமிநாதன்


அருள்மிகு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

**ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்**

**(கண்ணன் பிறப்பு)**

நிகழும் சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 15ம் நாள் (31 08. 2002) சனிக்கிழமை இரவு


## மராமரத்து குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை அலுவலகத்தில் இன்று மு.ப 10.00 மணிக்கு மராமரத்துக் குழுக்கூட்டம் குழுத் தலைவர் கே. கிங்ஸ்லி கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-2)

## பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கின்

பலாலி அம்மன் ஆலயம் செல்லும்

## பக்தர்கள் எண்ணிக்கையை படையினர்மட்டுப்படுத்துகை

(திருநெல்வேலி)

உயர் பாதுகாப்புவலயமான பலாலியில் அமைந்துள்ள ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் ஏற்பாட்டில் பூசைவழிபாடுகள் நடைபெற்று வருவது தெரிந்ததே

தற்போது 8பேர் மட்டும் ஆலயத்திற்கு செல்ல முடியும் என குறிப்பிட்டு படையினர் கடிதம் ஒன்றை ஆலய நிர்வாகத்திடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்,

அக்கடிதத்தில் முதற்கட

நிகழும் சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 15ம் நாள் (31 08. 2002) சனிக்கிழமை இரவு விசேட அபிஷேக ஆராதனையுடன் உற்சவம் நடைபெறும்.

இரவு 8.00 மணி - 9 30 மணி

சமயச் சொற் பொழிவு

★ திரு. சி. நவரத்தினம் சைவப்புலவர் (ஆசிரியர்)

★ சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள் (ஆசிரியர்)

9.30 மணி - 11.30 மணி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நாதஸ்வர, தவில் வித்துவான்கள்

சின்னமனூர் N. A. கார்த்திகேயன்
இடும்பவனம் E. V. இளையராசா
மிலக்கோட்டை A. அசோக்குமார்
ஸ்ரீரங்கம் V. G. முருகன்
இணுவில் N. R. S. ரவீந்திரன்

ஞாயிறு அதிகாலை 3.00 - 4 30 மணி

வில்லுப்பாட்டு

திரு. வீ. காசிநாதன் குழுவினர்

அதிகாலை 5.00 மணிக்கு எம்பெருமான் பூந்தண்டிகையில் வெளிவீதி வலம் வருவார் இந் நிகழ்ச்சிகளைக் கண்டு எம்பெருமான் அருள் பெற்று உய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறங்காவலர் சபை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
துன்னாலை வடக்கு,
புலோலி

(C-4890)

# பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கின் இடத்திற்கு ஆனந்தராஜா?

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் பதவிக் காலம் இவ்வருட இறுதியில் முடிவடைகின்றது.

இப்பதவிக்கு புதிய பொலிஸ்மா அதிபராக சேவை மூப்பு அடிப்படையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரி. ஆனந்தராஜா, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் எச். எம். ஜி. பி கொட்டகதெனியா ஆகிய இருவரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என தெரியவந்துள்ளது.

(உ-3)

# படையினர் செயல் குறித்து புலிகள் தரப்பு அதிருப்தி

(திருநெல்வேலி)

யாழ்-கண்டி ஏ-9 வீதி 24 மணி நேரமும் திறந்திருப்பதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது என தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், படையினரே இந் நடைமுறையை அமுல்படுத்த பின்னடித்து வருவதாகவும்,

மிருசுவில் பாதையை தான் தோன்றித்தனமாக நேர காலத்துடன் மூடிவிட்டு, குற்றத்தை நம்மேல் படையினர் சுமத்தி வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(உ-43)

# சமாதான அபிவிருத்தி ஒன்றியக் குழு யாழில்

(யாழ்ப்பாணம்)

தென் பகுதி சமாதான அபிவிருத்தி ஒன்றியத்தின் 30 அங்கத்தவர்கள் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளது.

மதங்களினூடாகச் சமாதானத்தை எட்டுவதை நோக்கமாகக் கொண்ட இக் குழு, 5 நாட்கள் தங்கியிருந்து யாழ்ப்பாண நிலைமைகளையும் நேரில் அவதானிக்கவுள்ளது.

(உ-19)

கடிதம் ஒன்றை ஆலய நிர்வாகத்திடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்,

அக்கடிதத்தில் முதற்தடவையாக 4 பேர் மட்டும் ஆலயத்திற்கு செல்ல அனுமதிப்பதாகவும், 2வது தடவையாக மேலும் 4பேரை அனுமதிப்பது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பூசை இடம்பெறும் போது பெருமளவு படையினர் கலந்து கொள்கின்றனர் என்று பூசகர் தெரிவித்துள்ளார்.

(உ-43)

# ஜெயந்தி உற்சவம்

(மந்திகை)

வரலாற்று சிறப்பு மிக்க ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலில் ஜெயந்தி உற்சவம் எதிர் வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விஷேட அபிஷேக ஆராதனைகளும் நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் பிறப்பும் அதனைத் தொடர்ந்து விஷேட பூசைகளும் நடைபெறும்.

இரவு இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள தவில் வித்துவான்களுடைய இசைக் கச்சேரியும் வில்லிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் அதிகாலை 5 மணிக்கு பூந்தண்டிகையில் சுவாமி வீதி உலாவருதலும் வெண்ணையை திருடும் உறியடி உற்சவமும் நடைபெறவுள்ளது.

(உ-32)

# இன்று ஒரு தகவல்

## ஆன்மீக நோக்கம்

காசிக்குப் போனால் கர்மம் தொலையும் என்பது ஒரு நம்பிக்கை, காசியில் இருக்கிற பெண்தெய்வம் அன்னபூரணி, அதனால் அந்த ஊரில் பசியால் கஷ்டப்படுகிறவர்கள் கிடையாது என்று பெயர். அங்கு இருக்கிறவர்கள் மற்றவர்களுக்கு தானதர்மங்களைத் தராளமாகப் பண்ணிக்கொண்டேயிருப்பார்கள் என்று அந்தக்காலத்திலேயே அந்தஊருக்கு ஒரு புகழ் இருந்தது. ஜனங்கள் அந்த ஊரைப்பற்றி அங்கேயிங்கே பெருமையாகப் பேசிக்கொண்டது வியாசபகவான் காதிலே விழுந்தது. வியாசர் தான் வேதங்களை நான்காக வகுத்தவர். மகாபாரதம் எழுதியவர். அவருக்கே ஆச்சரியம். இப்படியும் ஓர் ஊர் இந்த உலகத்தில் இருக்க முடியுமா என்று!

சரி! எல்லாரும் அந்த ஊரைப்பற்றி இவ்வளவு பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள், அதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கிறது என்று சோதனை பண்ணிப் பார்த்து விடவேண்டியது தான்! என்று முடிவு பண்ணிவிட்டார். உடனே தன்னுடைய சீடர்களைக் கூப்பிட்டார். ''காசிக்குப் போகவேண்டும் புறப்படுங்கள்'' என்றார். ஏன்போகவேண்டும் என்ற விபரத்தையும் சொன்னார். பரிசோதனை பண்ணிப் பார்க்கவேண்டும் என்பதைவிட அந்த ஊருக்குப் போனால் எல்லாருக்கும் இலவசமாகச் சாப்பாடு போடுவார்களாமே... அதனால் விதம்விதமாகச் சாப்பிட்டுப்பார்க்கலாம் என்கின்ற நினைப்புத்தான் சீடர்களுக்கு அதிகாமாக இருந்தது.

சரியான சாப்பாட்டுப் பிரியர்கள், சும்மா இருப்பார்களா? உடனே உற்சாகமாகப் புறப்பட்டுவிட்டார்கள். எல்லாரும் காசிக்குப் போய்ச் சேர்ந்தார்கள் போனதும் முதல்வேலையாக ஒரு தர்மசத்திரத்தைப் பிடித்துததங்கிவிட்டார்கள். அடுத்தவேலையாக எல்லாரும் கங்கையில் போய்க்குளித்தார்கள் அடுத்தபடியாக அவர்கள் எல்லாரும்பிரிந்து ஆளுக்குஒவ்வொரு பக்கமாக ஊருக்குள் போனார்கள்... எதற்கு? சாப்பாட்டுக்காகத்தான்! வந்ததே அதற்காகத்தானே! எங்கெங்கெல்லாமோசுற்றிவிட்டுச் சத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

சாயந்தரம் சோர்ந்துபோய்-பசிமயக்கத்தோடு தள்ளாடிக்கொண்டே வந்து சேர்ந்தார்கள் என்ன காரணம்? அவர்கள் யாருக்குமே ஒரு வாய் சோறுகூடக்கிடைக்கவில்லை. என்ன இது? எல்லாரும் இந்த ஊரைப்பற்றி அவ்வளவுஉயர்வாகப் பேசினார்கள். கடைசியில் இங்கே வந்துபார்த்தால் ஒன்றுமே இல்லையே என்று நினைத்தார்கள்.

இருந்தாலும் ஒருசந்தேகம் அவர்களுக்கு ஒருவருக்கு பசிக்கு மத்தியிலும் ஒரு யோசனை 'ஒரு வேளை இன்றைக்குச்சாஸ்திரப்படி பிச்சை போடக் கூடாத நாளாக இருக்குமோ?' என்றார். பிச்சையிடக்கூடாத நாள் என்று ஒரு நாளை எந்த சாஸ்திரமும் சொல்லவில்லையே! என்றார் இன்னொருவர். எல்லாச்சாஸ்திரமும் படித்தவர் போலிருக்கிறது. இருந்தாலும் படித்த சாஸ்திரங்கள் பசிக்கு ஆகாரமாகஉபயோகப்பட முடியவில்லையே என்ன செய்வது? வியாசர் 'சரி! இன்றைக்கு இப்படி ஆனது ஆய்விட்டது கொஞ்சம் பொறுமையாக இருங்கள்...... நாளைக்கு என்ன ஆகிறது என்றுபார்க்கலாம்' என்றார்.

நாளைச்கு என்ன ஆகுப்? இந்தப்பசி இன்னும்கொஞ்சம் அதிகமாகும் அவ்வளவு தான் என்று நினைத்தார் ஒருவர் இருந்தாலும் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டார். வெளியில் சொல்லவில்லை. மறுநாளும் தெருத்தெருவாக அலைந்தார்கள். ஒன்றும் கிடைக்க வில்லை. அடுத்த நாளும் போனார்கள். பலவீடுகளில் பிச்சைபோடுவதற்கு எப்மிடம் ஒன்றும் மில்லையென்று சொல்லிவிட்டார்கள் மறுநாளும் போனார்கள். இவர்கள் வருவதைப்பார்த்ததும் எல்லாரும் கதவை இழுத்து மூட ஆரம்பித்துவிட்டார்கள். ஏழு நாட்கள் இப்படியே கழிந்து விட்டது. எட்டாவது நாள் வியாசர் ஒரு வீட்டுக்கு முன்னால் போய் நிற்கிறார் குரல் கொடுக்கிறார் 'வீட்டிலிருந்தவர்கள் யாருமே இதைக்கண்டுகொள்ளவேயில்லை. வியாசருக்குக் கோபம் வந்து விட்டது. அது எல்லை மீறிப் போய் விட்டது. காசியில்இருக்கிறவர்கள் அத்தனை பேருக்கும் சாபம் கொடுத்து விடவேண்டும் என்று நினைத்தார் அதற்காக வலது கையைத் தூக்கினார் அந்தச் சமயத்தில் ஒரு பெரிய வீட்டுக்கதவு திறந்தது. வீட்டுக்கார அம்மா வெளியே வந்தார். நிறுத்துங்கள் என்றார். என்ன ஆச்சரியம், தூக்கிய கையை இவரால் இறக்கவே முடியவில்லை. அப்படியே நின்று போனது.

அந்த அம்மா லேசாகச் சிரிக்க ஆரம்பித்தார். அதன் பின்னர் தான் இவர்கையை அசைக்க முடிந்தது. உடனே கீழே கொண்டுவந்துவிட்டார் அந்தஅம்மா இவரைப்பார்த்து 'இதோ பாருங்கள்! நீங்கள் இந்த ஊரின் மேல் காரணமே இல்லாமல் கோபப்படுவதில் அர்த்தமில்லை' என்றார். என்னம்மா இது!... நாங்கள் ஏழு நாள்கள் பட்டினியாகக் கிடக்கிறோம்? நீங்கள் இப்படிச் சொல்கிறீர்களே!' என்றார்.

அந்த அம்மா சிரித்துக் கொண்டு... சரி எல்லாரும் எங்கள் வீட்டுக்கு வாருங்கள் என்று கூப்பிட்டார் வியாசர் சத்திரத்துக்குப் போய் சீடர்களிடம் விஷயத்தைச் சொன்னார். ஏழுநாட்கள் பட்டினியால் தளர்ந்து போயிருந்தாலும் எல்லாரும் இதைக் கேட்டவுடன் துள்ளி எழுந்தார்கள். அடுத்த வினாடியே அந்தஅம்மா வீட்டில்எல்லோருக்கும் இலை போட்டாயிற்று. சோறு, கறி வைக்கவில்லை. அந்த அம்மா... 'ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறீர்கள்... சாப்பிடவேண்டியது தானே' என்றார். என்ன இது... வெறும் இலையையா சாப்பிடுவது? வியாசருக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது .. என்னவோ சொல்வதற்கு வாயைத் திறந்தார். அடுத்தகணம் இலையைப் பார்த்தார்... 'விதவிதமான உணவு வகைகள் நிறைந்து போயிருக்கிறது. ஏழு நாள்பட்டினி சும்மா இருப்பார்களா? அடுத்த ஏழு நாட்களுக்குத் தாங்கும் அளவுக்கு ஒரு பிடி பிடித்தார்கள். அதன்பின்னர் நிமிர்ந்து பார்த்தால்.. தேவி அன்னபூரணியே அங்குகாட்சி கொடுத்தாராம். சரி. அவர்களுக்கு ஏன் ஏழுநாட்களாக இவ்வளவு கஷ்டப்? இதற்கு சிவபெருமான் வியாசருக்கு விளக்கம் கொடுக்கிறார்.

'உங்களில் ஒருவர் கூடப் பக்தி சிரத்தையோடு காசி யாத்திரை வரவில்லை. நீங்கள் இந்த ஊரின் அதிசயத்தைப் பரிசோதனை பண்ணிப் பார்க்க வேண்டுமென்று வந்தீர்கள், உங்களுடையசீடர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

# இடைநிறுத்தப்பட்ட தேவாரதம் படகுச் சேவை சனியன்று ஆரம்பமானது

(ஊர்காவற்றுறை)

இடை நிறுத்தப்பட்ட தேவாரதம்படகுச்சேவைமீண்டும் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய தீவுகளுக்கு ஊர்காவற்றுறைகண்ணகியம்மன் கோவில் துறைமுகமூடாக இடம்பெற்று வந்த தேவாரதம்படகுச்சேவை ஒரு வாரகாலமாக இயந்திரப் பழுது காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

மேற்படி படகுச் சேவை மீண்டும் காலை9.30மணிக்கு ஊர்காவற்றுறை கண்ணகியம்மன் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு எழுவைதீவு, அனலைதீவு, ஊடாக நயினாதீவைச் சென்றடையும்.

பிற்பகல் 2 30 மணிக்கு நயினாதீவில் இருந்து புறப்பட்டு அனலைதீவு, எழுவைதீவு ஊடாக ஊர்காவற்றுறை சென்றடையும் எனவும் இதற்கேற்ப பேருந்துச் சேவை யாழ்ப்பாணம் வரை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-75)

# மீன் வியாபாரி மரணம்

பருத்தித்துறை மீன்சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் திடீரென ஏற்பட்ட வலியினால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமானார்,

பருத்தித்துறை 4 ஆம்குறுக்குத் தெருவை சேர்ந்த பெ.சேவியர் (வயது 52) என்பவரே இவ்வாறு மரணமானார்.

இறந்தவரின் சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (உ-23)

# திருமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் நியமனம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபராக சுந்தரம் அருமைநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது திருகோணமலை பட்டணமும், சூழலும்பகுதிக்கான பிராந்திய செயலாளராகவும், திருகோணமலை நகராட்சி மன்றத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியாக பணியாற்றி வரும் இவர் ஏககாலத்தில் மேலதிக அரச அதிபர்பதவியையும் ஏற்றுள்ளார். (உ-3)

# அக்கரை கடற்றொழில் கூ.ச மீனவர்கள் தொழில் செய்ய படையினர் தடை விதிப்பு

(திருநெல்வேலி)

தொண்டமனாறு அக்கரை கடற்றொழில்கூட்டுறவுச்சங்க மீனவர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மீன்பிடியில் ஈடுபட படைத்தரப்பு தடை விதித்துள்ளது

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் தங்கள் மீனவர் சங்கங்களினூடாக வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசம் போர் நிறுத்த கண்காணிப்பு குழுவிடம் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளது. (உ-43)

# 11 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நியமனம்

(சுதுமலை)

வடக்கு-கிழக்குமாகாணசுகாதார சேவைப்பணிப்பாளரினால் மத்தியமாகாணத்தைச் சேர்ந்த 11 பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவுகளில்பணியாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிற்கு சென்றவாரம் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளரினால் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

கோப்பாய்,பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிபிரிவுகளில் தலாஇரண்டு பேர் வீதமும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபிரிவுக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-252)

# ஞாபகார்த்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இடதுசாரிக் கட்சியின் முன்னோடி காலஞ்சென்ற தோழர் மு. கார்த்திகேபனின் 25வதுஞாபகார்த்த தினநிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் தேதி மாலை 3 30 மணிக்கு யாழ். சிற்றி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

மேற்படி நிகழ்வில் இடதுசாரிக் கட்ச்சிப் பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர். (உ-2)

# ஆஸி.வர்த்தகர் தூதுக்குழு இலங்கை வரும்

(கொழும்பு)

இலங்கையில் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ள 13பேரைக் கொண்ட அவுஸ்திரேலிய வர்த்தகத் தூதுக்குழு செப்ரெம்பர் மாதம் முதலாம திகதி இலங்கை வரவுள்ளது.

இக்குழு முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதிவரை இங்கு தங்கியிருந்து இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராயவுள்ளது. (உ-3)

# வட - கிழக்கில் மிதிவெடி அபாயம் ஒரு தசாப்தம் நீடிக்கும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளையும், மிதிவெடிகளையும் அகற்றுவதற்கு குறைந்தது 10 வருடங்களாவது எடுக்கும்.

இவ்வாறு அமெரிக்காவின் மிதிவெடிகள் அகற்றும் பிரிவின் தொழில்நுட்ப அதிகாரி டாக்டர் டம்பினிக் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிரந்தரமானசமாதானத்தீர்வு காணப்படும் பட்சத்திலேயே.இந் நடவடிக்கையினை இலதுவாக மேற்கொள்ளமுடியும்.

தேவேளை, யாழ்.குடாநாடு உட்பட வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமான நிலக் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக இராணுவ மிதிவெடிகள் அகற்றும் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (உ-8)

# யுத்த கைதிகள் பரிமாற்றம் குறித்துப் பேச வேண்டும்

## பிரதமரிடம் வலியுறுத்த முடிவு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்குமிடையே தாய்லந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் யுத்தக் கைதிகள் பரிமாற்றம் குறித்து பேசப்படவேண்டும் என கோரும் மகஜர் ஒன்றை காணாமல் போன படைவீரர்களது உறவினர்களின் சங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கையளிக்க முடிவு செய்துள்ளது.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஐக்கியதேசியக் கட்சி எதிர்வரும் 9 ஆம் திகதி மக்கள் இயக்கமொன்றை நடத்தவுள்ளது.

இவ் இயக்கத்தின் பிரதான வைபவமேடையில் வைத்தே இம் மகஜர் கையளிக்கப்படவுள்ளது. (உ-3)

# பிரிட்டன் விற்பனை நிபுணர் குழு இலங்கை வரும்

(கொழும்பு)

பிரிட்டனிலிருந்து முகாமைத்துவ சேவைக் குழுவினர் அடுத்தமாதம் இலங்கை வரவுள்ளனர்.

வீட்டுப்பாவனைப் பொருட்கள், பயன்படுத்திய ட்ரக் வண்டிகள், கப்பல் போக்குவரத்து சாதனங்கள், இயந்திரசாதனங்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் துறைகளில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் இக்குழுவில் அடங்கியுள்ளனர். (உ-3)

# தீவுப் பகுதிக்கான பேருந்துச் சேவைசீரில்லை

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிக்கான பேருந்துச் சேவைகள் குறிப்பிட்ட நேர ஒழுங்கில் இடம்பெறுவதில்லை எனப் பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

தீவுப்பகுதிக்குவடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் பேருந்துச் சேவைகள் குறிப்பிட்ட நேர அட்டவணையின்படி இடம்பெறாமையினால் பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைஏற்படுவதாகவும்,

இதனால் நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை, வேலணைபகுதிகளுக்குச் செல்லும்பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-75)

# போடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பழ.நெடுமாறன் விடுதலை செய்யப்பட வேண்டும்

## நாகப்பாவின் விடுதலைக்கு வீரப்பன் விலை பேசுகிறான்

(சென்னை)

போடோ தடைச்சட்டத்தின் கீழ் தமிழக அரசினால் கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசிய வாதத் தலைவர் பழ நெடுமாறன் உடன் விடுதலை செய்யப்படவேண்டும்.

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவைகடத்தியுள்ள சந்தனக்கடத்தல் வீரப்பன் அவரின் விடுதலைக்கான கோரிக்கைகள் அடங்கிய ஒரு நிமிட ஒலி நாடாவை வெளியிட்டுள்ளான்.

அவ் ஒலிநாடாவில் மேற் கண்ட கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

தமிழக, கர்நாடக மாநில சிறைகளில் தடுத்துவைக்கப் பட்டுள்ள தனது சகாக்கள் விடுதலைசெய்யப்பட வேண்டும்.

காவிரி நீர் திறந்து விடப் பட வேண்டும்.

கர்நாடகத்தில் தமிழ் இரண்டாவது ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளும் அவ் ஒலி நாடா மூலம் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வீரப்பனைத் தேடும் பணி மத்திய அரசின் ஆசீர்வாதத்துடன் வால்டர் தேவாரம் தலைமையில் முடுக்கி விடப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீரப்பனைத் தேடிப்பிக்க புதிய யுக்திஒன்று கையாளப் பட்டிருப்பதாக கர்நாடக உள்துறை அமைச்சர் மல்லிகா அர்ஜுன் இதனை உறுதி செய்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, கடந்த 2 வருடங்களின் முன்னர் கன்னட நடிகர் ராஜ்குமாரை கடத்திய சந்தனக் கடத்தல் வீரப்பன் இது போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும், இறுதியில் 108 நாட்களின் பின், அவற்றில் ஒரு சில நிறைவேற்றப்பட்ட நிலையில் அவரை விடுவித்ததும் தெரிந்ததே. (உ)

## அங்கோலாவைக் கட்டியெழுப்ப சர்வதேச சமூகம் ஒத்துழைக்கும்

### ஐ. நா. செயலாளர் நாயகம் அனான்

(றுவாண்டா)

கடந்த 25 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள அங்கோலாவை கட்டியெழுப்புவதற்கு, சர்வதேச சமூகம் முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் புவி மாநாட்டுக்கு செல்வதற்கு முன்னர், ஆபிரிக்க நாடுகளுக்கான சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அங்கோலாவின் தலைநகர் றுவாண்டாவில் வைத்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கோலாவின் புனர்நிர்மாணப் பணிகளில் கண்ணிவெடி அகழ்வும், மனிதாபிமான உதவிகளும் முக்கியமானவை என்று மேலும் குறிப்பிட்டார்.

1975 ஆம் ஆண்டில் போர்த்துக்கல் ஆட்சி முடிவுற்றதையடுத்து அங்கோலாவில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக, சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகியமை குறிப்பிடக்கது. (உ-8)

## மீனவர்கள் குழு மோதல்

(காரைநகர்)

காரைநகர் தூம்பில்பிட்டி கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காரைநகர் பகுதி கடற்றொழிலாளர்களை சுழிபுரம் பகுதி கடற்றொழிலாளர்கள் தாக்கியுள்ளனர் இச்சம்பவம் ஞாயிறு இரவு 8 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது

இச்சம்பவத்தில் காரைநகர் பகுதி கடற்றொழிலாளர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களின் இரு வள்ளங்களையும், ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய கடற்றொழில் உபகரணங்களையும் மற்றைய தரப்பினர் அபகரித்துச் சென்றுள்ளனர். (உ-246)

## வீட்டுப் பாவனைப் பொருட்கள்

(தென்மராட்சி)

யு. என். எச். சீ. ஆர் நிறுவனம் நேற்று முன்தினம் பளைப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 230 குடும்பங்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியது.

பளையில் இதுவரை 680 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

# உலக தரிசனம்

## சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பு தென்னாபிரிக்க நீதிமன்றை முற்றுகை

(கேப்டவுண்)

தென்னாபிரிக்காவின் நீதிமன்றம் ஒன்றை கிறீன்பீஸ் எனப்படும் அந்நாட்டு சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பின் அங்கத்தவர்கள் சிலர் முற்றுகையிட்டுள்ளனர்

தென்னாபிரிக்க பொதுமக்களின் உள்ளங்களில், தமது அமைப்பு சம்பந்தமான நல் அபிப்பிராயங்களை வளர்த்துக்கொள்ளும் நோக்கிலேயே இவர்கள்இவ் நீதிமன்றினை முற்றுகையிட்டுள்ளனர் என தென்னாபிரிக்க புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே கோபெக் என்ற அணுவாலை ஒன்றின் பாதுகாப்பையும்மீறி இவர்கள்அதனுள் பிரவேசித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் தென்னாபிரிக்க ஜோகன்னஸ் பேர்க் நகரில் புவி உச்சிமாநாடு நடைபெற்று வருகிறது. சுற்றாடல் பாதுகாப்புஅமைப்பினர் சிலர் தமது எதிர்ப்பை பயன்படுத்தும் களமாகவும் இதனை பயன்படுத்தலாம்என்பதால் அம்மாநாட்டுக்கு பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகதென்னாபிரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## புளோரிடாவில் உள்ள பள்ளிவாசல்களை குண்டு வைத்து தகர்க்க திட்டமிட்ட டாக்டர் பொலிஸாரால் கைது

(வாஷிங்டன்)

அமெரிக்க மாநில மான புளோரிடாவில் உள்ள 50 பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய நிலையங்களை குண்டு வைத்து தகர்க்க திட்டமிட்ட டாக்டர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது மனைவியைக் கொலை செய்யப்போவதாக அடிக்கடி அச்சுறுத்தி வந்துள்ளார் இது தொடர்பாக மனைவி பொலிஸாருக்கு தகவல் கொடுத்திருந்ததன்பேரில் பொலிஸார் அவரைக் கைது செய்யச் சென்றனர்.

அவ்வேளை, வீட்டிலிருந்து 20 குண்டுகளும் 10 செயற்படாத் தன்மை வாய்ந்த குண்டுகளும் தொலை நோக்கி பொருத்தப்பட்டதுப்பாக்கி, ஏ.கே.47 ரக துப்பாக்கி இரண்டு றொக்கெட் லோஞ்சர்கள் மற்றும் கிளைமோர் கண்ணிவெடி என்பன மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட டாக்டரை விசாரணை செய்த போதே பள்ளிவாசல்கள் இஸ்லாமிய நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த இவர் திட்டமிட்டிருந்தார் என்பது தெரியவந்துள்ளது. (உ-3)

## அமெரிக்காவால் தேடப்பட்டு வந்த சவுதி அரேபிய வாசியை பெற்றோர் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்

(ரியாத்)

அமெரிக்கா மீதான செப்ரெம்பர்- 11 தாக்குதலுடன் தொடர்புடையவர் என அமெரிக்காவால் தேடப்பட்டு வரும் சவுதியரேபியாவைச் சேர்ந்த அப்துல்- அஸீஸ் சௌத் அல் ரவித்தை அவரது பெற்றோர் சவுதி அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

தமது மகனுக்கும் எந்தவொரு தீவிரவாத அமைப்புகளும் தொடர்பில்லை என சௌத்தின் பெற்றோர் அவ் அதிகாரிகளிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, செப்ரெம்பர்- 11 இல் தாக்குதல் நடத்தியவர்களின் இருப்பிடங்களில் கைப்பற்றப்பட்ட பொருட்களில் சௌத்தின் புகைப்படம் காணப்பட்டது என எப்.பி.ஐ தெரிவித்துள்ளது. (உ-3)

## ஈராக் தென்பகுதியில் அமெரிக்கா பிரிட்டன் இணைந்து தாக்குதல்

(பக்தாத்)

அமெரிக்க, பிரிட்டிஷ் யுத்த விமானங்கள் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் ஈராக்கின்தென்பகுதியில் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக ஈராக்கின்இராணுவஅதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஈராக்கின் தென்பகுதியில் நடத்தப்பட்ட இத்தாக்குதலின் போது ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன்வீடொன்றும் பலத்த சேதத்துக்கு உள்ளாகியது.

இத்தகைய தாக்குதல் ஒன்றை தாம் மேற்கொள்ளவில்லை என அமெரிக்க பிரிட்டிஷ் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்விருநாடுகளுக்கு சொந்தமான விமானங்கள் ஈராக்கில் தாக்குதல் நடத்தியதனால் 8 பொதுமக்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பாக்தேர்தலில்ஷெரீப்போட்டி சவுதிஅரேபியாவில் இருந்து வேட்பு மனுத் தாக்கல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரீப் எதிர்வரும் ஒக்டோபரில் அங்கு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுவை இறுதிநாளான நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரீப், துணைவியார்வுல்சூங் மற்றும் அவரது சகோதரன் சபல் செரீப்ஆகியோர் பாகிஸ்தான் லாகூர் நகரில் போட்டியிடுவதற்கான மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் சவுதி அரேபியாவிலிருந்தே தங்களது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை, மற்றொரு முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கடந்தவாரம் இலண்டனில் இருந்து தனது வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே.

பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் ஆட்சியை தான் தக்க வைத்துக் கொள்ளும் நோக்குடன், தனக்கு சாதகமான பல சட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவந்தமையால், முன்னாள் பிரதமர்கள் போட்டியிடுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஜோர்ஜியா மீது தாக்கு வாஷிங்டன் கண்டனம்

(லஸ்குருசெஸ்)

ஜோர்ஜியாவின் வடபகுதியில் கடந்த வெள்ளியன்று ரஷ்யா மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சை வாஷிங்டன் கண்டித்துள்ளது.

ரஷ்யாவின் இச்செயல் ஜோர்ஜியாவின் இறைமையைப் பாதித்துள்ளதாகவும், கஸாகஸ் பிராந்தியத்தில் பதற்றத்தை தோற்றுவிக்கும் எனவும்வாஷிங்டன் குற்றம்சாட்டியுள்ளது.

எந்தவொரு தாக்குதலையும் தாம் ஜோர்ஜியாவில் நடத்தவில்லை என மொஸ்கோ மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை
குறள்

வலம்புரி

## கல்வியின் வீழ்ச்சி

யாழ். மாவட்டத்தின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதை பரீட்சை முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற க. பொ. த உயர்தரப்பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியிருந்தது. அதன் முடிவுகள் யாழ் மாவட்டமாணவர்களின் கல்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியை துலாம்பரமாகக் காட்டி நிற்கிறது. இது குறித்து பிரபல்யமான கல்லூரியின் அதிபர் ஒருவர் கருத்துக் கூறுகையில். யாழ்ப்பாணத்து மாணவர்கள் ஒரு காலத்தில்பல்கலைக்கழக அனுமதியை கோட்டா முறையில் மேற்கொள்ளாமல் திறமை அடிப்படையில் மேற்கொள்ளுமாறு கேட்டனர். ஆனால் இப்போது திறமை அடிப்படைகளை விட்டுகோட்டா முறையில் பல்கலைக்கழக அனுமதியைத் தாருங்கள் எனக் கேட்குமளவிற்கு நிலைமை மாறிவிட்டதெனக் கூறியிருந்தார்.

இதிலிருந்து மாணவர்களின் கல்விப் பின்னடைவை உணர முடிகிறது.

யுத்தத்தின் தாக்கத்தால், அடிப்படை வசதிகளற்ற நிலையில், சிறந்த கல்விப் பேற்றைப்பெற்ற யாழ்ப்பாண மாணவர்களுக்கு அடிப்படைவசதிகள் கிடைத்த வேளையில் கல்வியில் வீழ்ச்சிகண்டுள்ளனரெனில் அதற்குக் காரணமாக இருக்கும் பின் புலங்கள் குறித்து ஆய்வு செய்வது கல்விச் சமூகத்தின் தலையாய கடமையாகும்.

5ம் தர புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து தேசிய கல்லூரியில் அனுமதி பெற்ற மாணவர்கள் க.பொ.த (உயர்) தரத்தில் மூன்று பாடங்களிலும் சித்தியின்மையைப் பெறுகிறார்களெனில் அதற்கு காரணமாக இருக்கக் கூடிய தவறுகளை இனங்காண்பது மிக மிக அவசியமாகும்.

கல்வித்துறையை தனது முதலீடாகக் கொண்ட யாழ்ப்பாணத்தில் சமகால மாணவர்களின் சிந்தனைகளும், செயற்பாடுகளும் பாதைமாறிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இத்தகைய போக்கு தொடருமானால் யாழ்ப்பாணத்தைப் பின்தங்கிய மாவட்டமாகக் கருதி பல்கலைக்கழக அனுமதி நிர்ணயிக்கப்படும் நிலையும் ஏற்படலாம்.

# பால் உற்பத்தியை பாதிக்கும் காரணிகளில்

# பசுக்களில் ஏற்படும் மடி அழற்சி முக்கியமானது

பண்ணையாளரின் பொருளாதார வளர்ச்சியில் பசுவும் பால் உற்பத்தியும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. பால் உற்பத்தியை பாதிக்கும் காரணிகளில் மடி அழற்சி முக்கிய இடத்தை வகிக்கின்றது.

மடி அழற்சி என்பது மடிக் காம்பின்துவாரத்தின் ஊடாகக் கிருமிகள். (பக்ரீரியா, பங்கஸ்) பால் சுரக்கும் இழையங்களுட் சென்றுஊடுருவி தாக்கி அழற்சியை, புண்ணை ஏற்படுத்துவதால் மடிஅழற்சி ஏற்படுகின்றது. மடி அழற்சி இரு வகைப்படும். ஒன்று - தோற்றம் காட்டும் அல்லது வெளிக்காட்டும் மடி அழற்சி (Clinical Mustitis) இது நோயின்முற்றிய நிலை இரண்டாவது - தோற்றம் காட்டா அல்லது வெளிக்காட்டா மடி அழற்சி (Supclinical Mustitis) இதில் அறிகுறிகள் வெளியில் தென்படாது. ஆனால் பால் உற்பத்தி குறைந்து காணப்படும் இதனால் ஏற்படும் பொருளாதார இழப்பு பெரியது.

### மடி அழற்சியை ஏற்படுத்தும் காரணிகள்

1) அசுத்தமான தொழுவம்- கிருமிகள் நிறைந்திருக்கும்.
2) பாற் பசுவின் சுத்தம்; பசுவை சுத்தமாகவைத்திராவிட்டால் மடியில் ஊத்தையும் கிருமிகளும் அதிகம் காணப்படும்.
3) பால் கறப்போரின் சுத்தம்:-பால்கறப்பவர் தன்னையும் கைகளையும் சுத்தமாகவைத்திராவிட்டால் அவரில் உள்ள கிருமிகள் மடி அழற்சியை உண்டு பண்ண ஏதுவாக இருப்பர்.

**டாக்டர் எம். தங்கராசா**
யாழ். கால்நடை வைத்தியசாலை

4) பால் கறக்கும் பாத்திரங்களின் சுத்தம்- பால்பாத்திரங்கள் மிகவும் சுத்தமாக இல்லாவிட்டால் அவையில் உள்ள கிருமிகள் மடியைத்தாக்கும்.
5) சரியான முறையில் பால் கறவாமை.

### தோற்றம் காட்டும் மடி அழற்சியின் அறிகுறிகள்

1) மடி சிவந்து வீங்கியிருக்கும்.
2) மடி சூடாயிருக்கும்.
3) மடியில வலி அல்லது நோ காணப்படும்.
4) மடியில் நிறமாற்றம் அல்லது அழுகுதல்- இது ஆடுகளில் மட்டும் காணப்படும் அறிகுறி.
5) பால் கறக்கும்போதுமாடு வேதனைப்பட்டு பால் கறப்பதைவிட மறுக்கும்.
6) பால்காம் புதடித்திருத்தல்,பால்வெளி வரும் துவாரம்சில வேளைகளில் அடைத்திருத.ல்
7) பால் திரட்சி அடைந்திருக்கும், கட்டிகள் காணப்படும், நிறம்மாற்றம் அடைந்து இருக்கும் சில வேளைகளில் இரத்தம் காணப்படும்.
8) வெளித் தோற்றம்காட்டாத மடி அழற்சியை இரசாயனப் பரிசோதனைமூலமே அறிந்து கொள்ள முடியும்.

### பரிசோதனையில் காணல்

ஸ்ரீப்கப் பரிசோதனைக் கிண்ண மூலம்மடிவருத்தத்தை இலகுவாக பண்ணையாளர் அறிந்து கொள்ள முடியும் இது இலகுவானது.

ஒருகோப்பையின் வாயை கறுப்புத்துணி ஒன்றினால் மூடிகட்டி முதலி ல்ஒவ்வொரு முலையிலிருந்தும் வெவ்வேறாக 'ஸ்ரிப் கப்'பினுள கறந்து பரிசோதித்துப் பார்த்தால்-பாலின் கட்டிகளோ அல்லது நிறமாற்றமோதென்பட்டால் உடனே கால்நடை வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று பசுவைசிகிச்சை செய்யவும்.

### சிகிச்சை முறை

மடி அழற்சி ஏற்பட்ட பசுவிற்கு உடனடி சிகிச்சை செய்யாவிட்டால் நிரந்தரமாக பால் உற்பத்தி அற்றுப் போய்விடுவது மட்டும் அல்லாமல் மாட்டின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம். ஆடுகளில் மடி அழற்சியில் அழுகல் மடி அழற்சி ஏற்பட்டால் அதை மாற்றுவது இயலாது மடியை சத்திரசிகிச்சை செய்து அகற்ற வேண்டி ஏற்படும் அல்லது ஆட்டை பட்டியில் இருந்து அப்புறப்படுத்த வேண்டி வரும். எதற்கும் கால் நடை வைத்தியரின் ஆலோசனைப்படிசெய்யவும்

# புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோதே

# புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுவிட்டது

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்துக்கும் சமாதான முயற்சிகளுக்கும் எதிராக எதிர்க் கட்சியின் ஒரு பகுதியினரும் இனவாத அமைப்புக்களும் வீதியில் இறங்கினாலும் இந் நாட்டு மக்கள் இவர்களின் பிரசாரங்களை வரவேற்கப் போவதில்லை**

தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தற்போதைய சமாதான முயற்சிகள் மற்றும் 6 ஆம் திகதியுடன் புலிகள் மீதான தடை நீக்கம் பற்றி இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

கலாநிதி பெரேரா மேலும் கூறுகையில்;

சமாதான முயற்சிகளில் முக்கியமான ஒரு விடயத்தை விடுதலைப் புலிகளின் தடையை நீக்குதல் என்ற முடிவின் மூலம் அரசாங்கம் செய்துள்ளது அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன் படிக்கையில் கைச்சாத்திட்டபோதே புலிகளின் வெளிப்படையான தன்மையையும் நியாயத்தையும் ஏற்றுக் கொண்டு விட்டது.

எனவே அப்போதே புலிகள் மீதான தடை நீக்கப் பட்டுள்ளது என்பதே அர்த்தம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டதன் மூலம் புலிகளை அங்கீகரித்துள்ளார்.

அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் அரசியல் அலுலவகங்களை மேற்கொள்ள முடியும் என்ற நிலையின் படி புலிகள் ஏற்கனவே தடைகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்பதே அர்த்தம்.

செப்ரெம்பர் 6 ஆம் திகதி வெளியாகப் போகும் அறிவிப்பு ஒரு சம்பிரதாயபூர்வமான நிகழ்வு மட்டுமேயாகும்.

இது பேச்சுக்களின் போது புலிகளை சட்டபூர்வமானவர்களாக அங்கீகரிக்க உதவும் சர்வதேச ரீதியில் புலிகளின் நற் பெயரை வளர்க்க உதவும்.

இன்று எதிர்க் கட்சியின் ஒரு பகுதியினரும் ஜே வி.பி மற்றும் சில அமைப்புக்களும் சமாதான முயற்சிகளைக் குழப்ப முனைகின்றனர்.

ஆனால் மக்கள் இவர்களின் பிரசாரத்துககு ஆட்படுவார்கள் என்று நாம் நம்பவில்லை.

ஜே.வி.பியின் உறுப்பினர்கள் வேண்டுமானால் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யலாம். புலிகளின் தடை நீக்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்துள்ளதாகக் காட்ட முனையலாம். ஆனால் இந் நாட்டு மக்கள் அவ்வாறு கிளர்ந்து எழும் சூழல் இல்லை என்று கூறினார்.

(இ)

## தினசரி தியானம்

### உண்மைக் கல்வி

ஆன்மீகக் கல்வியே உண்மையானகல்வியாகும். இறைவனது நாமமே உண்மையான செல்வம். இவை எல்லோருக்கும் கிடைக்கக் கூடியவை. இவற்றைப் பெற யாரும் தடையாயிருக்க முடியாது. உண்மை, அன்பு, தூய்மை ஆகியவை கொண்ட தெய்வீக வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள். பிரம்மச்சாரியத்தை மேற்கொள்ளுங்கள். இறைவன் நாமத்தைப் பாடுங்கள் முதுகலைப் பட்டம் பெற்றவர்களும், ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர்களும் உங்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கும் படியான அறிவைப் பெறுவீர்கள். தெய்வீகப் பாதையைப் பின்பற்றுங்கள். இதுவே உண்மையான கல்வி.

சுவாமி சிவானந்தர்

# ஆயுர்வேதவைத்திய சேவை வாரத்தில் 3 தினங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் உள்ள இலவச ஆயுர் வேத வைத்திய சாலை வாரம் மூன்று நாட்கள் இயங்கி வருகின்றது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் மேற்படி வைத்தியசாலை வாரத்தில் திங்கள், வெள்ளி, சனி ஆகிய நாட்களிலேயே இயங்கி வருகின்றது.

இதேவேளை, மேற்படி வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் இயங்கும் அனலைதீவு ஆயுர்வேத வைத்தியசாலையிலும் கடமையாற்றுவதனாலேயே மூன்று தினங்கள் சேவை இடம்பெறுகிறது. (உ-75)

## ப நோ. கூ.ச. கிளை திறப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்று அண்மையில் வேலணை அம்பிகை நகரில் திறந்து வைக்கப் பட்டுள்ளது. (உ-75)

## உள்ளகப் பயிற்சி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர்களை பரீட்சை மற்றும் நியமனம் தொடர்பாக கலந்துரையாட வசதியாக இன்று பி.ப 2 மணிக்கு கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு பீடாதிபதி தி. கமலநாதன் கேட்டுள்ளார். (உ)

# இந்துசமய விவகார அமைச்சுக்கு போதிய நிதி ஒதுக்கப்படவில்லை

## அமைச்சர் தலைமையில் கூடித் தீர்மானம்

(கொழும்பு)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி மகேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்துப் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர்.

அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள், தமிழ் மக்களின் அபிலாசைகளை எவ்விதத்திலும் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, அரசாங்கம் யுத்தத்தினால் சேதப்படுத்தப்பட்ட ஆலயங்களின் புனர் நிர்மாணம், தமிழ் விவகாரம், தமிழ் கலாசாரம் ஆகிய பணிகளையும் இந்த அமைச்சுக்கு உடனடியாக வழங்க வேண்டும். இப்பணிகள் உள்ளடக்கப்படா விட்டால் அமைச்சு தமிழ், இந்து மக்களுக்கு ஒருபொழுதும் பயனுள்ள சேவையை ஆற்ற முடியாது.

அமைச்சின் வேலைத்திட்டங்களுக்கு இவ்வாண்டு எவ்வித நிதியும் ஒதுக்கப்படாதமை மிகுந்த கவலைக்குரியது. ஆகவே அமைச்சின் பணிகளுக்கு (தமிழ் விவகாரங்கள், தமிழ் கலாசாரம் உட்பட) தேவையான நிதியை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் ஒரு கூட்டத்தை இயன்ற விரைவில் கூட்டி, மேற்குறித்த இரு விடயங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடி, அங்குஎடுக்கப்படும் முடிவுகளுக்கமைய பிரதம அமைச்சரைத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு சந்தித்து அமைச்சின் பணிகள் விஸ்தரிப்பு பற்றியும், அமைச்சின் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு பற்றியும் பேச்சுவார்த்தைநடத்தி அவற்றைத் தாமதமின்றி செயற்படுத்துமாறு கோருதல் வேண்டும்.

மேற்குறித்த தீர்மானங்களுக்கமைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் இன்று புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு பாராளுமன்றக் குழு அறையில் கூட்டப்படவுள்ளது.

(உ)

## பார்வையாளர்கள் மீது பாரபட்சமற்ற விசாரணை

(கொழும்பு)

அமைச்சர் ஜோன் அமரதுங்கா மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பின்போது பார்வையாளர்கள் மத்தியில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தப்படும் என்று சபாநாயகர் யோசப் மைக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் அவர்களது உயிரைப் பாதுகாப்பது ஆகியவற்றைகவனத்தில்கொண்டே இந்த முடிவு எடுத்துள்ளதாக அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது குறித்த பூர்வாங்கவிசாரணைகளை நடத்துமாறுதான் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகத்துக்கு உத்தரவிட்டிருப்பதாகவும்,

அன்றைய தினம் பார்வையாளர்கள் பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட விதம் வருந்தத்தக்கது என்பதுடன் இவர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்துவந்தவர்களே அதற்கான பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## மின் விநியோகம் இன்னும் சீரில்லை

### தென்மராட்சி ந, சே. ச, கடிதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், வடமராட்சிபகுதிகளுக்கான மின்சார விநியோகப் பணிகள் பூர்த்தியானதும் தென்மராட்சிப் பகுதிக்கான மின்சார விநியோகத்திற்குரிய பணிகள் ஆரம்பமாகுமென தென்மராட்சியைச் சேர்ந்த சகல தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்டது ஆனால் இன்று வரை தென்மராட்சிப் பகுதியில் மின்சார விநியோகத்திற்கான எவ்வித பணிகளும் ஆரம்பிக்கப்படாதிருப்பது எமக்கு பெரும் ஏமாற்றமளிப்பதாகவுள்ளது.

தென்மராட்சி மக்கள்நலச் சேவைகள் சங்கம் இலங்கை மின்சாரசபையின் யாழ்ப்பாண பிரதிப்பொதுமுகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்படப் பட்டுள்ளதாவது:

எமதுசங்கத்தின் 18 08. 2002 திகதி நிகழ்ந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் தென்மராட்சிப்பகுதியில் மீளகுடியமர அனுமதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் மீளக் குடியமர்ந்தும் பாடசாலைகள் அரச தனியார்திணைக்களங்கள் வங்கிகள் வர்த்தகஸ்தாபனங்கள் என்பன மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளமையையும் கருத்திற்கொண்டு தென்மராட்சி பகுதிக்கான மின்சார விநியோக பணிகளை தாமதமின்றி ஆரம்பிக்கும்படி தங்களை கோருவதென ஏகமனதாக தீர்மானிக்கப் பட்டுள்ளமையை தங்கள்மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

தயவுசெய்து இவ்விடயத்தில் தாங்கள் உடனடியாக தலையிட்டு உரியநடவடிக்கையை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (உ-19)


# பதவி வெற்றிடம்

## அலுவலகசெய்தியாளர்கள்

(பயிலுநர்கள்)

★ ஆண்கள் (வெளிக்களம்)
★ பெண்கள் (ஆசிரியர் பீடம் உள்ளகம்)

**வயது:** 22-35

**தகைமை:**

க. பொ. த (சா) தரத்தில் தமிழ், கணிதம் உட்பட 3 பாடங்களில் திறமைச் சித்தி, அத்துடன் க. பொ. த (உயர்) தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி

**வதிவிடம்**

யாழ். நகரப்பகுதியில் இருந்து 8மைல் சுற்றளவில் நிரந்தர வதிவிடத்தை உடையவர்களாக இருத்தல்.

தகுதியானவர்கள் இன்று 28. 08. 2002 புதன் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரிப் பத்திரிகையின் பிரதம அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

குறிபபு:- ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் பத்திரிகை அறிமுகப் பயிற்சி பெற்றவர்கள் நிரந்தர நியமனத்தில் உள்வாங்கப் படுவர்.

நிர்வாக உத்தியோகத்தர்
**வலம்புரி**
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.



திருமறைக்கலாமன்றம்
வழங்கும்
**ஸ்பார்ட்டக்கஸ்**
(நாடகம்)
ஓகஸ்ட் 30, 31:
செப்1, 2002
(வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில்
மாலை 6.45 மணி
(4867)



**MP 3CD's**
வெளியீடு
01 தொடக்கம்75வரை
(பழைய புதிய பாடல்கள்)

**அபிநயா**
மல்ரி
எலெக்ரோனிக்ஸ்
யாழ் வீதி மானிப்பாய்.
(தினேஸ் பேக்கரிமுன்பாக)
(கி-4892)


## இலங்கை வங்கியின் 63 வது ஆண்டு நிறைவுவிழாஇன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 63 வது ஆண்டு நிறைவு விழா இன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வங்கியின் மேற்தரக்கிளையில் நடைபெறவுள்ளது.

வங்கிப் பொது முகாமையாளர் எஸ்.விக்னராஜா தலைமையில்நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இளைப்பாறிய நீதிபதி மு திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதேவேளை வங்கி தனது 64வது ஆண்டு சேவையில் காலடி எடுத்து வைக்கும் இன்று, நல்லூர் ஆலயச் சூழலில் உற்சவகால வங்கிக் கிளையொன்றை திறக்கவுள்ளது.

இக்கருமபீடத்தில் சேமிப்பு சான்றிதழ்கள் மற்றும் புதிய கணக்குகளை ஆரம்பிப்பவர்களின் இலக்கங்கள அதிர்ஸ்டக் குலுக்கலில் சேர்க்கப்படுமென்றுதெரிவிக்கப்படுகிறது.

அதிர்ஸ்டக் குலுக்கல் எதிர்வரும் பூங்காவனத் திருவிழா அன்று நடைபெற்று பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (இ-2)

## இராணுவ அதிகாரிகளுடன் விடுதலைப்புலிகள் சந்திப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் முக்கியஸதர்களுக்கும் ஸ்ரீலங்கா இராணுவஉயர்அதிகாரிகளுக்குமிடையே முக்கிய சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சுமார் 45நிமிடங்கள்இடம் பெற்ற இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சார்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியக நிர்வாகப் பொறுப்பாளர் சோ.தங்கன் அரசியல்துறையைச் சேர்ந்த ஈழமாறன், ராஜா, கிளி, ஆகியோரும் இராணுவத்தின் தரப்பில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, பிரிகேடியர் அல்விஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)

### புலிகளுக்கு

தலைப்புலிகள் வரிஅறவிடுகிறார்கள் அதற்குஎன்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்று கேள்வி எழுப்பிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்.

விடுதலைப்புலிகள் வரி அறவிடுகின்றார்களா என்பது குறித்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்காவுடன் கலந்துரையாடியுள்ளேன்.

ஆனால் புலிகள்இதுவரை வரிஅறவிடுவது தொடர்பாக தனக்கு முறைப்பாடுகளோ அறிக்கைகளோ கிடைக்கவில்லையென்று அமைச்சர் அமரதுங்கா குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் வரி அறவிடுவது உறுதிப்படுத்தப்படுமானால் நிதிச்சட்டத்தின் கீழ்அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்றுஅமைச்சர் சொக்ஸி கூறியுள்ளார்; (இ-8)

### ஜனாதிபதி

ணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்நிதி மோசடி தொடர்பாக திறைசேரி உயர் அதிகாரிகளும் விசாரணைக்குட்படுத்தப் படவுள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

### தீர்வுத்திட்ட...

பேராயரின் செயலாளர்சிறில் பெரேராவும் கலந்துகொண்டனர். அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதானமுயற்சி குறித்தும் தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும் பிரதமர் பேராயரிடம் விரிவாக எடுத்துக் கூறினார். சமாதான முயற்சிகள்சரியான பாதையில் முன்னேறிச் செல்கின்றன. செப்டம்பர் மாதம் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் பிரதமர் தெரிவித்தார்.

ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்ததும் நவம்பர் மாதமளவில் இரு தரப்புக்கும் இடையில் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் இதில் முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படும் எனவும்பிரதமர் எடுத்துக் கூறினார்.

இதேவேளை அரசாங்கத்தின் சமாதான முயற்சிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டியதே அவசியம் என்றும் பேராயர் ஒஸ்வோல்ட்கோமிஸ் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்;

(இ

## இன்று இசை ஒத்திகை கலைஞர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலய கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள இசைஅர்ச்சனை நிகழ்சியின் ஒத்திகை இன்றுமாலை 6மணிக்கு நல்லூர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இசைஅர்ச்சனை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் அனைத்து இசைக்கலைஞர்களும் தமது ஒத்துழைப்பினை வழங்கி இன்று நடைபெறவுள்ள ஒத்திகை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கார்த்திகை உற்சவ தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை ஆலயத்தின் உள்வீதியில் ஆறுதிசைகளில் இந்த இசைஅர்ச்சனைநிகழ்வு இடம்பெறவுள்ளது. (எ)

### அரசின்

அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கைத் தீர்மானத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் முரண்பட்ட கருத்துக்களை கொண்டுள்ளனர்.

அரசு கொண்டுவரவுள்ள நம்பிக்கைத் தீர்மானத்துக்கு தமிழர்விடுதலைக் கூட்டணியும், ரெலோவும் ஆதரித்து வாக்களிக்கத் தீர்மானித்திருப்பதாக கூட்டமைப்பு வட்டாரங்கள்தெரிவித்துள்ளன. நேற்று இடம்பெற்ற தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இது தொடர்பாக எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்பதும் மேற்படி விடயம் குறித்து இன்று கூடி தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் நேற்று வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் அரசு மீதான நம்பிக்கைத் தீர்மானத்துக்கு நடுவுநிலை வகிக்கப் போவதாக ஏற்கனவே அறிவித்துள்ளது. (ம)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 28-08-2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.